**இலங்கைச் சுங்கம்**

இல.40, பிரதான வீதி, கொழும்பு 11

*www.customs.gov.lk*

# இலங்கைச் சுங்கம்

# மூலோபாயத் திட்டம்

# 2024-2028


CUSTOMS
HANSAKAWA
COLOMBO





# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | 4 |
| மூலோபாயத் திட்டம் 2024-2028 | 5 |
| நிறைவேற்றுச் சுருக்கம் | 6 |
| மூலோபாய இலக்குகள் | 8 |
| எமது நோக்கு, குறிக்கோள், மற்றும் விழுமியங்கள் | 10 |
| தற்போதைய முன்னெடுப்புக்கள் மற்றும் சவால்கள் | 11 |
| முன்னோக்கி நகர்த்தல் | 15 |
| பிரதான இலக்கு 01: வருமானம் | 16 |
| பிரதான இலக்கு 02: வர்த்தகத்திற்கு வசதியளித்தல் | 18 |
| பிரதான இலக்கு 03: சுற்றாடல் - சமூகப் பாதுகாப்பு | 20 |
| பிரதான இலக்கு 04: நிறுவன ரீதியான அபிவிருத்தி | 22 |


Block-A



# பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

2024 ஆம் ஆண்டுப் புத்தண்டுப் பிறப்புடன், அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்காக இலங்கைச் சுங்கத்தின் இலட்சியப் பாதையினை கோடிட்டுக் காட்டுகின்ற உயர் மட்டக் கொள்கை மற்றும் மூலோபாய ஆவணமாகிய, 'மூலோபாயத் திட்டம் 2024-28' இனை அறிமுகப்படுத்துவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இதில் உட்பொதிந்துள்ள கொள்கைகள் மற்றும் மூலோபாயங்கள் என்பன தேசிய மட்டத்திலான தேவைப்பாடுகள் மற்றும் உயர்ந்த எதிர்பார்க்கைகள் என்பன பூர்த்திசெய்யப்படுவதனை உறுதிசெய்து, இலங்கை சுங்கத்தின் எதிர்காலத்தை வழிநடாத்துவதனையும் நோக்காகக் கொண்டுள்ளது. முன்னொரு போதுமில்லாதவாறு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கான வருமானம் ஈட்டும் முக்கிய திணைக்களங்களில் ஒன்றாக இலங்கைச் சுங்கம் செயற்பட்டு வருவதன் காரணமாக இந்த மூலோபாயம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

2023 ஆம் ஆண்டில், வர்த்தக நிலுவையினை கட்டுப்படுத்தும் நோக்கில் இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கைச் சுங்கம் அதன் வரலாற்றில் ஒருபோதும், அடையப் பெற்றிராத உயர் வருமான அடைவிற்காக பாராட்டத்தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்பதற்கு அதன் அடைவுகள் சான்றுபகர்வதோடு, இவற்றிற்குப் பின்னாலுள்ள உள்ளாற்றல்களைக் கருத்திற்கொண்டு, இலங்கைச் சுங்கமானது, அதன் பலம் மற்றும் பலவீனங்களைப் பற்றிய விரிவானதொரு புரிதலினை ஏற்படுத்தி, இந்த மூலோபாயத் திட்டத்தினை மிகக் கவனமாக வடிவமைத்துள்ளது.

இலங்கைச் சுங்கத்தின் பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு அமைவாக, வருமானம், வர்த்தகத்திற்கு வசதியளித்தல், சுற்றாடல் - சமூகப் பாதுகாப்பு, மற்றும் நிறுவன அபிவிருத்தி என்று நான்கு முக்கிய துறைகளை இலக்காகக் கொண்ட குறித்த மூலோபாயத் திட்டம் அடையாளம் கண்டுள்ளது. அதற்கமைய, இத் திட்டம் இலக்குகளை நிர்ணயித்துள்ளதோடு, மேலே கூறப்பட்டுள்ள இலக்கிடப்பட்ட துறைகளின் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்வதற்கான மூலோபாயங்களையும் வழங்குகிறது. மேலும், மூலோபாயத் திட்டத்தினைத் தயாரிக்கையில், நிறுவனத்தின் நோக்கு, குறிக்கோள் என்பனவற்றிற்கான வரைவிலக்கணங்களையும் புதிதாக வழங்கி, நவீன அணுகுமுறை ஒன்றினைப் பின்பற்றுவதற்கான முயற்சியொன்றியைனயும் தொடங்கியுள்ளது.

சர்வதேச வர்த்தகத்திற்காக வசதிகளை வழங்குகின்ற, பிரதானமாக எல்லைக் கட்டுப்பாட்டு முகவர் என்ற வகையில், இலங்கைச் சுங்கம் அதன் நடைமுறைகள் மற்றும் முறைமைகளை உலக சுங்க அமைப்பு மற்றும் உலக வர்த்தக அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புக்களால் விதித்துரைக்கப்பட்ட தரங்களுக்கமைய சீரமைத்துக் கொள்ளவும் வேண்டும். இந்த மூலோபாயத் திட்டத்தினைத் தயாரிக்கையில், அவற்றிற்கும் உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்ட இலக்குகளைப் பின்பற்றியும், சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளக் கவனத்திற் கொண்டும் இந்த மூலோபாயத் திட்டம் வடிவமைககப்பட்டுள்ளது.

இந்த மூலோபாயத் திட்டமானது எனது அதிகாரிகளின் கூட்டு முயற்சிகளின் விளைவாகும் என்பதனை அறிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். பல்வேறுபட்ட பட்டறைகளில் கலந்துரையாடப்பட்ட அனுபவங்கள் மற்றும் கருத்துப் பரிமாற்றம் என்பனவற்றின் ஊடாக பெறப்பட்ட சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட மட்ட, அதிகாரிகளின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் என்பனவற்றினையும் இந்த மூலோபாயம் கூட்டிணைத்துள்ளது. இது இந்த ஆவணத்திற்கு குறிப்பிடத்தக்க பெறுமதியினையும் சேர்த்துள்ளது. இந்த மூலோபாயத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து இலக்குகளையும் அடைவதில் சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என்பதனை நான் அறிந்துவைத்திருந்த போதிலும், இத்திணைக்களதிற்கு உந்து சக்தியாக பணியாற்றுகின்ற இலங்கைச் சுங்கத்தின் அனைத்து அதிகாரிகளும் சவாலான காலங்களில் இலங்கைச் சுங்கத்தை வழிநடாத்துவதற்காகவும் தேசத்தினதும் அரசாங்கத்தினதும் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் தமது பூரண ஒத்துழைப்பினையும் வழங்குவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றேன். மேலும், இக்கருத்திட்டத்தினைப் பூர்த்திசெய்வதில் எமக்கு உதவிய மற்றும் வசதியளித்த ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அவுஸ்திரேலிய எல்லைப் படை என்பனவற்றையும் நாம் நன்றியுடன் நினைவுகூறுகிறோம்.

இந்த மூலோபாயத் திட்டம் யதார்த்தபூர்வமாக இருப்பதற்காகவும், காலவொழுங்கில் முன்னேற்றத்தினை மீளாய்வுசெய்வதற்காகவும், ஆர்வமுள்ள எமது பணியாளர்களுக்கு மத்தியில் திறந்த தொடர்பாடல் மற்றும் கருத்துப் பரிமாற்றம் என்பனவற்றினையும் நான் ஊக்குவிக்கின்றேன். இதன் விளைவாக, இந்த மூலோபாயம் அடையாளம் காட்டியுள்ள முக்கியமான துறைகளான வினைத்திறனான சுங்க நிருமாகம், பணி சார்ந்த அர்ப்பணிப்புக்கள் மற்றும் நேர்மை என்பனவற்றினூர்டாக இலங்கை சங்கத்தினை மேலும் எம்மால் பலப்படுத்த முடியும் என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

பி.பி.எஸ்.சி.நோனிஸ்
சுங்கப் பணிப்பாளர் நாயகம்

## இலங்கைச் சுங்கம்

# மூலோபாயத் திட்டம் 2024-2028

## இலங்கைச் சுங்கத்தின் மூலோபாய கூம்பகம்

இலங்கைச் சுங்கம் பாதுகாப்பான எல்லைகளினூடாக நாட்டை பாதுகாப்பதுடன், சுபீட்சத்தையும் உறுதிசெய்கிறது. எமது குறிக்கோளானது அரச வருமானம், சமூகம், சுற்றாடல் ஆகியவற்றைப் பாதுகாப்பதுடன், சீரான வசதியளிப்புகளை வர்த்தகத்திற்கும், சர்வதேச பயணத்திற்கும் நேர்மையுடனும், தொழில்வாண்மையுடனும் வழங்குவதை குறிக்கோளாக கொண்டுள்ளது. இத்தலையாய கடமையில் ஈடுபட்டுள்ள நாம், சர்வதேச தரத்திலான சேவையினை பொருளாதார சுபீட்சத்திற்கும், அனைவரது பாதுகாப்பான எதிர்காலத்திற்கும் வழங்குவதற்கும் அர்ப்பணிக்கிறோம்.

### ❑ வருமானத்தினை உச்சப்படுத்தல்

உரிய வருமானத்தினைத் திரட்டுதல், வருமானக் கசிவினைத் தவிர்த்தல், புதிய வருமான வழிகளைக் கண்டறிதல்.

### ❑ வினைத்திறனான எல்லைக் கட்டுப்பாட்டுடன் சமூகத்தையும் சுற்றாடலையும் பாதுகாத்தல்

எல்லை கடந்த குற்றங்களையும் மோசடிகளையும் தவிர்த்தல், சர்வதேச உடன்படிக்கைகளுடனும் தேசிய தரங்களுடனும் இணங்கிச் செயற்படுதல், உள்நாட்டு, வெளிநாட்டு எல்லை முகவர்களுடன் நல்லுறவைப் பேணல், சமூக, சுற்றாடல் பாதுகாப்பு பற்றி அறிவூட்டப்பட்ட பிரஜைகளை உருவாக்கல்.

### ❑ சட்டரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்தல

வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கான சர்வதேச கடப்பாட்டை நடைமுறைப்படுத்தலும், இணங்கிச் செயல்படுதலும், வர்த்தக வசதியளிப்பிற்கான அரச கொள்கைகளை வினைத்திளனுடனும் பயனுறுதியுடனும் அமுல்படுத்தல், சட்டத்திற்கு முரணாண வர்த்தகத்தை கட்டுப்படுத்தல்.

### ❑ அதி சிறந்த அடைவிற்காக நிறுவன கட்டமைப்பினை மாற்றியமைத்தல்

புத்தாக்க ரீதியிலான நவீனமயப்படுத்தல் ஊடாக முறைமைகளையும் நடைமுறைகளையும் ஒழுங்குபடுத்தல், மனித வள அபிவிருத்தி, நிறுவன அபிவிருத்திக்காக ஆராய்ச்சிகளை முன்னெடுத்தல், உச்ச வளப் பயன்பாடு, நிறுவன அபிவிருத்திக்காக சிறந்த நடைமுறைகளை ஏனைய முகவர் நிறுவனங்களுடன் கூட்டிணைதல், நேர்மைக் கட்டமைப்பு, நிறுவன ரீதியான கலாசார அபிவிருத்தி.

### நோக்கு

வலுவான எல்லைகள் மூலம் பாதுகாப்பான, வளமான நாடு

### குறிக்கோள்

நேர்மை மற்றும் தொழில்வாண்மை என்பனவற்றுடன், வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும், சுற்றாடலையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்கும், வர்த்தகம் மற்றும் பிரயாணம் என்பனவற்றின் தடையற்ற செயற்பாட்டை ஊக்குவிப்பதற்குமாகவும், சர்வதேச தரத்திலான சுங்க சேவையினை வழங்குதல்.

### குறிக்கோள் முன்னுரிமைகள்

- வருமானத்தினைப் பாதுகாத்தல்
- வர்த்தகத்திற்கு வசதியளித்தல
- சுற்றாடல்-சமூகப் பாதுகாப்பு
- நிறுவன ரீதியான அபிவிருத்தி

### மூலோபாய இலக்குகள்

- வருமானத்தினை உச்சப்படுத்தல்
- சட்டரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்தல்
- வினைத்திறனான எல்லைக் கட்டுப்பாட்டின் மூலம் சமூகம் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்தல்.
- அதி சிறந்த அடைவிற்காக நிறுவன கட்டமைப்பினை மாற்றியமைத்தல

### முக்கியமான விழுமியங்கள்

தொழில்வாண்மை | நேர்மை | பொறுப்புக்கூறல் | வெளிப்படைத்தன்மை | புத்தாக்கம் | குழுப் பணி

**தொழில்வாண்மை**
உயர்தர சேவையொன்றினை வழங்குவதில் பெருமிதம் அடைகிறோம்.

**நேர்மை**
நம்பகமான மற்றும் நெறிமுறையான நடத்தையினை வளர்கின்றோம்

**பொறுப்புக்கூறல்**
எமது செயற்பாடுகளை நாம் பொறுப்பேற்கிறோம்

**வெளிப்படைத்தன்மை**
திறந்த தன்மையினையும் எதிர்வுகூறலினையும் பேணுகிறோம்

**புத்தாக்கம்**
புதுமையினை நாம் தொடருகிறோம்.

**குழுப் பணி**
ஒருமைப்பாட்டு உணர்வை நம்புகிறோம்.

# நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கை நாடு எதிர்கொள்கின்ற தற்போதைய பொருளாதார நெருக்கடியை வழிப்படுத்துவதில் முக்கியமானதொரு பங்காளியாக காணப்படுகின்ற, செழிப்பான வரலாற்றினைக் கொண்டுள்ள இலங்கைச் சுங்கம், அரசாங்க வருமானத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கிவருகிறது. இறக்குமதிகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் வருமானச் சேகரிப்பில் முன்னொருபோதிலும் அடையப் பெற்றிராத உச்சமட்ட வருமானச் சேகரிப்பினை 2023 ஆம் ஆண்டில் இலங்கைச் சுங்கம் அடையப்பெற்றுள்ளதோடு, இந்த அடைவிற்கு திறமையான மனித வளங்கள் மற்றும் சுங்க நிருவாகத்தின் புத்தாக்க அணுகுமுறைகள் காரணமாய் அமைந்திருந்தன.

இலங்கைச் சுங்கமானது இந்த குறிப்பிடத்தக்க அடைவினை தன்னகமுள்ள திறமையான ஆளணி, நெருக்கடிகளின் போதான உபாய நடைமுறைகள், மற்றும் வலுவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமைகள் போன்ற, பலத்தினை நெறிப்படுத்துவதன் மூலம் சாத்தியமாக்கியுள்ளது. இடர்வு அடிப்படை தெரிவுப் பொறிமுறை மற்றும் சர்வதேச அமைப்புக்களுடான ஒத்துழைப்பு என்பன இந்த உயரிய நிலையை அடைவதற்கான இலங்கைச் சுங்கத்தின் அர்ப்பணிப்பினைக் எடுத்துக்காட்டுகின்றன. நன்கு சட்டவரையாக்கப்பட்ட சுங்க கட்டளைச் சட்டத்தின் மூலம் இலங்கைச் சுங்கம் நிதி ஊக்குவிப்பாக வெகுமதித் திட்டமொன்றினை அதன் அலுவலர்களுக்கு வழங்கி, அவர்களையும், தன்னையும் வலுப்படுத்திக் கொள்கிறது.

1992 ஆம் ஆண்டு முதல் வழிநடாத்தப்படுகின்ற தன்னியக்கமாக்கல் முறைமைகளின் அறிமுகத்துடன், புத்தாக்கத்திற்கான மாற்றமானது, இலங்கைச் சுங்கத்தின் வெற்றியின் அடையாளச் சின்னமாக காணப்படுகிறது. காகிதமில்லா ஆவணச் செயலாக்கம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை ASYCUDA முறைமையில் ஒருங்கிணைத்தமை என்பன கொவிட் - 19 காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அடைவுகளாக காணப்படுகின்றன. இடர்வு அடிப்படையிலான அணுமுறையொன்றிற்கான நகர்வொன்றின் மூலம் வர்த்தகர்களுக்கான வசதியளிப்புக்கள் மற்றும் கூட்டாண்மை திட்டங்கள் என்பன வினைத்திறனான வர்த்தக செயன்முறைகளுக்கான இலங்கைச் சுங்கத்தின் அர்ப்பணிப்பினை எடுத்தியம்பின.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் உச்ச வருமான இலக்குகள், தொழில்முறை விருத்திக்கான தேவை, அலுவலர் பற்றாக்குறை மற்றும் எதிர்மறையான பொதுமக்கள் மனப்பாங்கு உள்ளிட்ட சவால்களை இலங்கைச் சுங்கம் எதிர்கொள்கிறது. முன்னோக்கி வழிநடாத்திச் செல்கின்ற பாதையில், உரிய வருமானத்தினைத் திரட்டி, நடைமுறைகளை ஒழுங்குபடுத்தி, மற்றும் சர்வதேச தரத்தினை பூர்த்திசெய்து, சவால்களை எதிர்கொள்வது தொடர்பில் இலங்கைச் சுங்கத்தின் மூலோபாய முன்னோடித் திட்டம் கவனம் செலுத்துகிறது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தான பரிந்துரைகள், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் போக்குகளைப் புரிந்துகொள்ளல் என்பன எதிர்கால நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல்களாகும். 2024 ஆம் ஆண்டில் ASYHUB முறைமையினை செயற்படுத்துவதானது, எதிர்காலத்தில் இலங்கை சுங்கத்தின் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கான அர்ப்பணிப்பினை எடுத்துக் காட்டுகிறது..

அடுத்துவரும் ஐந்தாண்டுகளுக்கான இலங்கைச் சுங்கத்தின் மூலோபாயத் திட்டமானது, வருமானம், சுற்றாடல் - சமூகப் பாதுகாப்பு, வர்த்தகத்திற்கு வசதியளித்தல் மற்றும் நிறுவன ரீதியான அபிவிருத்தி போன்ற முக்கிய நான்கு துறைகளை மையப்படுத்தி அமைந்தள்ளது. சர்வதேச தர்த்திற்கு சீரமைப்பதன் மூலமும், புத்தாக்கத்தினை ஏற்பதன் மூலமும், சவால்களை எதிர்கொள்வதன் மூலமும், தாங்குதிறன் கொண்ட, வினைத்திறனான சுங்க நிருவாகமொன்றினைத் தோற்றுவிப்பதனை இலங்கைச் சுங்கம் தனது இலக்காகக் கொண்டு ஸ்திரமற்ற பொருளாதார சவாலினை முகம் கொள்ளவுள்ளது.


24
27
MAERSK



# மூலோபாய இலக்குகள்

பாரம்பரியமாக, சுங்கத் திணைக்களமானது, வருமான சேகரிப்பு, சட்ட அமுலாக்கம், வர்த்தகத்திற்கு வசதியளித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற நான்கு முக்கிய துறைகளில் கவனம் செலுத்துகிறது. ஆயினும், இலங்கைச் சுங்கத்தின் எதிர்கால தூர நோக்கினை இலக்காகக் கொண்டும், உள்நாட்டு வர்த்தக முறைகளில் ஏற்படுகின்ற அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக சூழலில் ஏற்படுகின்ற நகர்வுகள் என்பனவற்றினை அங்கீகரித்தும், இந்த மூலோபாயத் திட்டமானது, அடுத்து வரும் ஐந்து வருடங்களில் இலங்கை சுங்கம் எதிர்கொள்ளவுள்ள முக்கியமான துறைகளை அடையாளம் காட்டுகிறது. வருமானம், சட்டரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்தல், சுற்றாடல் - சமூகப் பாதுகாப்பு மற்றும் நிறுவன அபிவிருத்தி என்பன இதில் அடங்கும். இந்த முக்கிய துறைகளிலிருந்து பெறப்பட்ட பின்வரும் மூலோபாய இலக்குகள் 2024 ஆம் ஆண்டு முதல் 2028 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அடையப்பெற உத்தேசிக்கப்பட்டுள்ளவையாகும்.



**இலக்கு 1: வருமானத்தினை உச்சப்படுத்தல்**

நெருக்கடிகளுக்கு மத்தியில் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்தல், அரசாங்க வருமான இலக்குகளை அடைதல்.



**இலக்கு 2: சட்டரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்தல்**

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமான வர்த்தக அளவை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு, சட்ட ரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்தல் மற்றும் குறிப்பாக முரணான வர்த்தகர்களை அடையாளங் கண்டு நடவடிக்கை எடுத்தல்.



**இலக்கு 3 : வினைத்திறனான எல்லைக் கட்டுப்பாட்டின் மூலம் சமூகம் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்தல்.**

எல்லைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டின் சமூகம், உயிர்ப்பல்வகைமை, கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல்.



**இலக்கு 4 : அதி சிறந்த அடைவிற்காக நிறுவன கட்டமைப்பினை மாற்றியமைத்தல**

இலங்கைச் சுங்கத்தின் இலக்குகளை அடையும் வகையில் சுங்க சேவையின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி என்பனவற்றினை அதிகரிப்பதற்காக பன்முகதன்மை கொண்ட நிறுவன அபிவிருத்தியினை உறுதிசெய்தல்.


CUSTOMS
CUSTOMS

## நோக்கு

**"வலுவான எல்லைகள் மூலம் பாதுகாப்பான, வளமான நாடு"**

---

## குறிக்கோள்

**"நேர்மை மற்றும் தொழில்வாண்மை என்பனவற்றுடன், வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும், சுற்றாடலையும் சமூகத்தையும் பாதுகாப்பதற்கும், வர்த்தகம் மற்றும் பிரயாணம் என்பனவற்றின் தடையற்ற செயற்பாட்டை ஊக்குவிப்பதற்குமாகவும், சர்வதேச தரத்திலான சுங்க சேவையினை வழங்குதல்"**

---

## விழுமியங்கள்

**தொழில்வாண்மை** - உயர்தர சேவையொன்றினை வழங்குவதில் பெருமிதம் அடைகிறோம்.

**நேர்மை** – நம்பகமான மற்றும் நெறிமுறையான நடத்தையினை வளர்கின்றோம்.

**பொறுப்புக்கூறல்** - எமது செயற்பாடுகளை நாம் பொறுப்பேற்கிறோம்

**வெளிப்படைத்தன்மை** - திறந்த தன்மையினையும் எதிர்வுகூறலினையும் பேணுகிறோம்

**புத்தாக்கம்** - புதுமையினை நாம் தொடருகிறோம்

**குழுப் பணி** - ஒருமைப்பாட்டு உணர்வை நம்புகிறோம்.



# தற்போதைய முன்னெடுப்புக்கள் மற்றும் சவால்கள்

மிக நீண்ட வரலாற்றினைக கொண்ட இலங்கைச் சுங்கம் 1806 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. கி.மு.2 ஆம் நூற்றாண்டில் வெளிநாட்டுக் கப்பல்களிலிருந்து சுங்க வரி அறவிடப்பட்டுள்ள வரலாற்றினை தொல்பொருள் கல்வெட்டுக்கள் சான்றுபடுத்துகின்றன. இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் வகையில் அரசாங்கத்திற்கு வரி வருமானத்தினை திரட்டுவதில் மிக முக்கியமான திணைக்களங்களில் ஒன்றாக இலங்கைச் சுங்கம் பங்கு வகிக்கிறது. 2022 ஆம் ஆண்டில், கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், மொத்த அரச வருமானத்தில் 35% இனைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஏறத்தாள 40% வரி வருமானத்தினை திரட்டி, இலங்கைச் சுங்கம் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கியுள்ளது.

### தாபன பலத்தினைப் பயன்படுத்தல்

சவாலான நேரங்களில் முன்னோக்கி வழிநடாத்துவதில் திறமையான மற்றும் தகுதிவாய்ந்த மனித வளங்கள் இலங்கைச் சுங்கத்தின் வெற்றிக்கான முக்கிய காரணிகளாக அமைந்திருக்கின்றன. உதாரணமாக, கொவிட் -19 நோய்தொற்றுக் காலத்தில், வர்த்தகர்களுக்காக நெகிழ்வான நடைமுறைகளைப் பின்பற்றிய ஆளணியினரின் அர்ப்பணிப்பு காரணமாக இங்கைச் சுங்கத்தின் செயற்பாடுகள் தடையின்றி தொடரப்பட்டன. இலங்கைச் சுங்கத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையினை முகாமைசெய்கின்ற சுங்க அலுவலர்கள் அதனைப் பராமரித்தது மாத்திரமன்றி அதன் தன்னியக்க முறைமைகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி மேம்படுத்தியும் உள்ளனர். சரக்குகளை வெளியெடுக்கும் செயன்முறைக்காக இடர்வு அடிப்படையிலான தெரிவு முறைமை ஒன்றினையும் அவர்கள் வடிவமைத்துள்ளதோடு, மேலும் சில அலுவலர்கள் இடர்வு முகாமை முறைமையினை மேலும் மேம்படுத்துவதில் செயலூக்கத்துடன் ஈடுபட்டுள்ளனர். இலங்கை சுங்க அலுவலர்கள், சுங்க நிருவாகங்களுக்காக நியமங்களை தாபிக்கின்ற உலக சுங்க அமைப்பு (WCO) மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்ற சர்வதேச அமைப்புகள், குழுக்கள் மற்றும் மாநாடுகள் என்பனவற்றிலும் பங்குபற்றி, தமது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்துள்ளனர். மேலும், சில அலுவலர்கள், பல்வேறுபட்ட சுங்கத் துறைகளில் நிபுணர்களாக உலக சுங்க அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, ஏனைய நாடுகளைச் சேர்ந்த அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்கான சர்வதேச பணிகளிலும் பங்கேற்கின்றனர்.

நன்கு தாபிக்கப்பட்ட சட்டவாக்கக் கட்டமைப்பானது, சட்டவிரோத செயற்பாடுகளை எதிர்த்துப் போராடுவதற்கு மாத்திரமன்றி, சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளைப் பாதுகாப்பதற்கும் தேவையான அதிகாரங்களை இலங்கைச் சுங்கத்திற்கு வழங்குகின்றது. சுங்க கட்டளைச் சட்டமானது, 1869 ஆம் ஆண்டில் முதன்முதலாக தாபிக்கப்பட்டிருந்தாலும், கால அடிப்படையிலான தேவைகளுக்கேற்ப 51 திருத்தங்களுக்கு உட்பட்டுள்ளதோடு, இறுதியாக அது காலத்தால் பரீட்சிக்கப்பட் ஆவணமொன்றாகவும் மாறியுள்ளது. சுங்கச் சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட வெகுமதித் திட்டமானது, அலுவலர்களை நிதியியல் ரீதியாக ஊக்கப்படுத்துவதற்கும் நிறுவன அபிவிருத்திக்கும் ஏக வழிமுறையாக அமைந்துள்ளது. இது அதிகாரிகளின் வளத்தை மேம்படுத்துவதற்கும், நிறுவன வசதிகளை வழங்கவும் வாய்ப்பளிக்கிறது.

### புத்தாக்கத்திற்கு நிலைமாறுதல்

இலங்கையில் முன்னோடி அரசாங்க நிறுவனங்களில் ஒன்றாக சுங்கத் தொழிற்பாடுகளை தன்னியக்கமாகச் செயற்படுத்தும் வகையில், இலங்கைச் சுங்கமானது, 1992 ஆம் ஆண்டில் ASYCUDA முறைமையை நடைமுறைப்படுத்தியதோடு, அது பின்னர் ASYCUDA World System ஆக தரமுயர்த்தப்பட்டுள்ளது. கொவிட் - 19 காலப் பகுதியில் நிலவிய நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, குறிப்பாக, காகிதமில்லா செயன்முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் தன்னியக்கச் செயன்முறை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இக்கால கட்டத்தில் இலத்திரனியல் கப்பல் சரக்குப் பட்டியலினை சமர்ப்பித்தல், டிஜிட்டல் கையொப்பங்களைப் பயன்படுத்தல், வர்த்தகர்களுக்கு அவர்களின் சுங்கப் பிரகடனங்கள் நிலையினை அறிவிப்பதற்காக குறுஞ்செய்தி மூலமான விழிப்பூட்டல் முறைமை, பணவனுப்பல் முகாமை முறைமை, மற்றும் டிஜிட்டல் கையொப்பங்களைப் பயன்படுத்தல் என்பனவற்றினை உள்ளடக்கிய இச்செயன்முறை மூலம் இலங்கைச் சுங்கத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்வியல் பணிப்பகமானது, குறிப்பிடத்தக்க மைற்கல்லினையும் எட்டியுள்ளது.

குறிப்பாக, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகமானது, செயன் முறைமைகளை அங்கீகரித்து, அக்கறையுள்ள பங்காளர்களின் நேரம் மற்றும் செலவினங்களை உச்சமாக சேமித்தும், ஏனைய அரச நிறுவனங்களை இலங்கை சுங்கத்தின் ASYCUDA முறைமையினுள் வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளது. அதற்கமைய, தற்போது, 17 ஏனைய அரச நிறுவனங்கள் ASYCUDA முறைமையினுள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, விமான நிலையங்களிலுள்ள தீர்வையற்ற கடைகளில் சுங்க வரிச் சலுகைகளைக் கண்காணிப்பதற்காக தன்னியக்க முறைமையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சுங்கத் திணைக்களத்தில் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புபற்று அனைத்து கருத்திட்டங்கள் மற்றும் செயன்முறைகள் என்பனவும் இலங்கைச் சுங்கத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முன்னோடித் திட்டத்தில் சீரமைக்கப்பட்டுள்ளது.

## சமூகம், உயிர்ப்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல்

இலங்கையானது கடல் மற்றும் தரை என்பனவற்றில் வளமான உயிரப்பல்வகைமையினைக் கொண்டுள்ள உயிர்ப்பல்வகைமை வள வலயங்களைக் கொண்ட நாடாகும். எல்லையில் உயிர்பல்வகைமையினைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து, இலங்கைச் சுங்கமானது, உயரப்பல்வகைமைப் பாதுகாப்புப் பிரிவினை 1993 ஆம் ஆண்டில் நிறுவி, உலகில் உயிரப்பல்வகைமையினைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட விசேட பிரிவை நிறுவிய முதல் சுங்க நிருவாகமாகவும் மாறியுள்ளது. தற்போது இது கலாசாரம், விழுமியங்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் என்பனவற்றினை இணைத்து, உயில்பல்வகைமை, கலாசாரம், மற்றும் தேசிய மரபுரிமைப் பாதுகாப்புப் பிரிவு (Biodiversity, Cultural, and National Heritage Protection Branch) (BCNP) என விரிவடைந்துள்ளது.

பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதி, இறக்கியேற்றல் மற்றும் இடைமாற்றல் என்பனவற்றின் போது விதிமுறைகள் மற்றும் நியமங்கள் என்பனவற்றை அமுலாக்குவதுடன், தேசிய சட்டங்கள் மற்றும் சர்வதேச சுற்றாடல் ஒப்பந்தங்கள் பின்பற்றப்படுவதனை உறுதிசெய்து, சர்வதேச வர்த்தகமானது, சுற்றாடல் சார்ந்த விதிகளுக்குட்பட்டு செயற்படுவதை இலங்கை சுங்கம் உறுதிசெய்கிறது. பொருட்களின் நகர்த்தலுக்கமைய தொடர்புபற்ற சுற்றாடல் இடர்வுகளை மட்டுப்படத்துவதற்காக, சுற்றாடலுடன் தொடர்புபற்ற பொருட்களின் சட்டவிரோத வர்த்தகத்தைத் தடுப்பதில் கவனம் செலுத்தி, இடர்வு முகாமை நுட்பங்களைப் பின்பற்றுகின்றது. சட்டவிரோத வனவிலங்கு கடத்தலினை எதிர்த்துப் போராடியும், பாதுகாப்பு முகவர்கள் மற்றும் சர்வதேச அமைப்பக்களுடன் கூட்டுச் சேர்ந்தும், வனவிலங்குப் பாதுகாப்பிற்கு இலங்கைச் சுங்கம் பங்களிப்புச் செய்கிறது. இதற்கு மேலதிகமாக இலங்கைச் சுங்கமானது, இலத்திரனியல் ஆவணமயமாக்கல் மற்றும் இடர்வு மதிப்பீட்டு முறைமை போன்ற நவீன தொழில்நுட்பங்களைச் செயற்படுத்தி, சர்வதேச வர்த்தகத்தில் பசுமைத் தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் நடைமுறைகள் என்பனவற்றினை செயலூக்கத்துடன் ஊக்குவிக்கிறது. ஏனைய சுங்க நிருவாகங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் சுற்றாடல் முகவர் நிறுவனங்களுடன் கூட்டிணைந்து, இலங்கை சுங்கமானது, தகவல்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பனவற்றினையும் பகிர்ந்து கொள்கிறது.

இலங்கைச் சுங்கத்தின் நுகர்வோர் பாதுகாப்பு பிரிவானது, எல்லைகளைத் தாண்டிச்செல்லும் பொருட்கள், நுகர்வோருக்கும் சுற்றாடலுக்கும் குறிப்பாக, இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் அளவுகோல்களுக்கு அமைய, பாதுகாப்பானதா என்பதனைக் கண்காணிக்கிறது. புலமைச் சொத்து உரிமைகளுக்காக அர்ப்பணித்த அலுவலகம் என்ற வகையில் போலியான பொருட்கள் மற்றும் பதிப்புரிமை கொள்ளை என்பனவற்றிற்கு எதிராக போராடுவதோடு, எல்லைதாண்டிய அபாயகரமான கழிவுகள் பரிமாற்றத்தினையும் கண்காணிக்கிறது. நுகர்வோர் பாதுகாப்பு அலகானது, சுற்றாடல் குற்றங்களுக்கான தொடர்பு அலகாகும். போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவானது, இலங்கையின் எல்லைகளைச் சுற்றியுள்ள நுழைவாயில்களை கண்காணித்து, சட்டவிரோதப் போதைப் பெருட்களை நாட்டினுள் கடத்துவதற்கு எதிராக கடுமையாகப் போராடுகிறது. போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அர்ப்பணித்த பணியாளர்கள் உள்வரும் சரக்குகளையும் பயணிகளையும் 24 மணித்தியாலங்கள் / 7 நாட்களிலும் கண்காணித்து, அவர்களிடம் எதிர்பார்த்த பணிகளை பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றுகிறார்கள். துறைமுகக் கட்டுப்பாட்டு அலகானது, எல்லை கடந்த குற்றங்களுக்கு எதிராக செயற்படுவதற்கும், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் சரக்குகள் மற்றும் பயணிகளின் நகர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், போதைப்பொருள் மற்றும் குற்றங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNODC) மற்றும் உலக சுங்க அமைப்பு (WCO) ஆகியவற்றின் பயணிகள் சரக்கு எல்லை அணி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்குமான பிரத்தியேக அலகாகவும் காணப்படுகிறது.

## சட்ட இயைவான வர்த்தகர்களுக்கு வசதியளித்தல்

சட்டவாட்சி முகாமைத்துவத்திலிருந்து இடர் அடிப்படை அணுகுமுறையொன்றுக்கு மாறுவதானது, அடையாளம் காணப்பட்ட சட்ட இயைவான வர்த்தகர்களை அடையாளங் காணுவதை எளிதாக்குகிறது. உதாரணமாக, இடர்வினை அடிப்படையாகக் கொண்ட தெரிவுச் செயன்முறை மூலம் சரக்கு சோதனைகளை 73% சதவீதத்திலிருந்து 42% சதவீதத்திற்கு குறைக்க முடியும். நம்பகமான பொருளாதார இயக்குநர்களுக்கான சுங்க வணிக கூட்டுப் பங்குடைமை நிகழ்ச்சித் திட்டமொன்றினை இலங்கைச் சுங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதோடு, இது சிக்கலற்ற சுங்க செயன்முறைகளை வழங்குகிறது. நம்பகமான பொருளாதார இயக்குநர்கள் ஆரம்ப கட்டத்தில், சட்ட இயைவான பொருளாதார இயக்குநர்கள் என்ற அந்தஸ்த்தினைப் பெறுகின்றனர். அதன் பின்னர் அவர்கள் உயர் மட்டத்திலான விநியோக சங்கிலியில் பாதுகாப்பு நியமங்களைப் பேணுகின்ற போது அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குநர் என்ற அந்தஸ்திற்கு மேம்படுத்தப்படுவார்கள். இந்த இரண்டு திட்டங்களின் கீழாலும் வர்த்கர்கள் பௌதீக ரீதியாக சரக்கு சோதனைகளில் விலக்களிப்பு உள்ளடங்கலாக பல வசதிகளையும் அனுபவிப்பர்.

2021 ஆம் அண்டில், இறக்குமதிப் பெறுமதியோடு சம்பந்தப்பட்ட இடர்வுகளை மதிப்பீடுசெய்வதற்காக இறக்குமதிப் பெறுமதி மதிப்பீட்டுத் தளவுத்தளமொன்றினை உருவாக்கும் நோக்கில் தேசிய இறக்குமதி பெறுமதி மதிப்பீட்டுத் தரவுத்தளப் பிரிவு தாபிக்கப்பட்டது. இந்த தரவுத்தளம் நேர்மையான வர்த்தகர்களுக்கு வசதிகளை வழங்குவதோடு, விசேட சுங்க சலுகைக்காக தமது இறக்குமதி தொடர்பில் தவறான விலைப் பட்டியலைச் சமர்ப்பிக்கின்ற இறக்குமதியாளர்களை அடையாளம் காண்பதற்கும் உதவுகிறது.



இலங்கை தான் ஒப்பந்தத் தரப்பாகவுள்ள, உலக சுங்க அமைப்பின் திருத்தப்பட்ட கியோட்டோ வழக்காறு, எளிமையான ஆனால் வினைத்திறனான நடைமுறைகளின் சட்ட ஏற்பாடுகள் மூலம் வர்த்தக வசதி மற்றும் பயனுறுதி-மிக்க கட்டுப்பாடுகள் என்பனவற்றை ஊக்குவிக்கிறது. 2016 ஆம் ஆண்டில் இலங்கையானது, வர்த்தக வசதியோடு சம்பந்தப்பட்ட அனைத்து குறித்தாக்கப்பட்ட கடப்பாடுகளையும் செயற்படுத்துவதற்கு உறுதியளித்து, உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதயளிப்பு ஒப்பந்தத்தினை வலுவாக்கம் செய்துள்ளது. தற்போது உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதயளிப்பி ஒப்பந்தத்தினை (அ) மற்றும் (ஆ) வகைகளின் ஏறக்குறைய அனைத்து நடவடிக்கைகளையும் இலங்கைச் சுங்கம் நிறைவு செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் நடவடிக்கைகளப் பூர்த்திசெய்வதற்கான முயற்சிகள் வர்த்தக வினைத்திறனினை மேம்படுத்தி, வர்த்தக சமூகத்திற்கு அதிக வசதிகளையும் உறுதிப்படுத்துகிறது.

## சர்வதேச அமைப்புக்களுடன் கூட்டிணைதல்

உலக சுங்க அமைப்பானது அதன் உறுப்பினர்களுக்கு நவீன உலகின் யதார்த்தங்களை எதிர்கொள்வதற்கான பொருத்தமான சாதனங்களை வழங்குகிறது. இது தொடர்பில், உலக சுங்க அமைப்பானது, புதிய உத்திகளை வடிவமைத்து அறிமுகப்படுத்துகின்ற வேளையில், புதிய வாய்ப்புக்கள் மற்றும் சவால்களுக்கு பதிலளிப்பதற்காக பயன்பாட்டிலுள்ளவற்றையும் மேம்படுத்துகிறது. கூட்டு உடன்படிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடாத்துதல் என்பனவற்றின் மூலம் வசதியளிக்கப்பட்ட தகவல் மற்றும் புலனாய்வுப் பரிமாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி, சுங்க அங்கத்துவ நிருவாகங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு என்பனவற்றையும் இது ஊக்குவி-க்கிறது. உலக சுங்க அமைப்பின் மற்றுமொரு முக்கியமான செயற்பாடாக, உலக சுங்க அமைப்பின் நியமங்களைச் செயற்படுத்துவதற்காக உறுப்பினர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி அபிவிருத்தி ஒத்துழைப்பு என்பனவற்றினை வழங்கி, சுங்க ஒத்துழைப்பினை வலுப்படுத்தி சுங்கத்தை நவீனமயமா-க்குவதாகும். எனவே, 1967 ஆம் ஆண்டு முதல் உலக சுங்க அமைப்பில் உறுப்பு நாடு என்ற வகையில், அதனுடன் நெருக்கமாக பணியாற்றுகின்ற, இலங்கைச் சுங்கமானது, சர்வதேச நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பனவற்றினைக் கடைபிடித்து, அக்கறையுள்ள பங்காளர்களுக்கு வினத்திறனும் பயனுறுதியுமிக்க சேவைகளை வழங்குவதற்கு உறுதியளிக்கிறது. இலங்கை நாடு அங்கத்துவம் பெற்றுள்ள மற்றுமொரு சர்வதேச அமைப்பாக உலக வர்த்தக அமைப்பினைக் குறிப்பிடலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, இந்த அமைப்பானது முதன்மையாக வர்த்-தகத்தினை இலகுபடுத்துதல் உடன்படிக்கை போன்ற வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை அறிமுகப்படு-த்துகிறது.

இலங்சை சுங்கத்தின் தன்னியக்க முறைமையான ASYCUDA World ஆனது வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகள் மாநாடு (UNCTAD) cருவாக்கிய ஒருங்கிணைந்த சுங்க முகாமை முறைமையாகும். இந்த முறைமையின் பராமரிப்பு மற்றும் மேம்பாடு என்பன UNCTAD இன் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பிலான அலுவலகம் உள்ளடங்கலாக ஏனைய சர்வதேச அமைப்புக்கள், இலங்கை சுங்கத்தின் மனித மூலத-னத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கான பயிற்சி மற்றும் பட்டறைகளை ஒழுங்குமுறையாக ஏற்பாடுசெய்து வழங்குகி-ன்றன. மேலும், இலங்கை சுங்கம், ஏனைய சுங்க நிருவாகங்களுக்கிடையிலான கூட்டிணைவுடன் புரிந்துணர்வு ஒப்பந்-தங்கள் (MOUs) மற்றும் பரஸ்பர ஒப்பந்தங்கள் என்பனவற்றினைக் கைச்சாத்திடுவதன் மூலம் வலுப்படுத்தப்பட்டிருக்கிறது.

# சவால்கள்

இலங்கையில் வருமானம் திரட்டும் பிரதான அரசாங்க திணைக்களங்களில் ஒன்று என்ற வகையில், நாட்டின் முன்னொருபோதுமில்லாத பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட சவால்மிக்க வருமான இலக்குகளை அடைவதற்காக இலங்கை சுங்கத்தின் மீது அழுத்தம் காணப்படுகின்றமை வெளிப்படையாகும்.

இலங்கைச் சுங்கத்திலுள்ள திறமைமிக்க மற்றும் தேர்ச்சிபெற்ற மனித வளங்கள் நிறுவனத்தினை இயக்குகின்ற முக்கிய காரணிகளாக அடையாளங் காணப்படமுடியுமாக இருந்த போதிலும், அதிகமான தொழில்வாண்மைமிக்க மற்றும் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட ஊழியப்படையொன்றினை உருவாக்குவதற்காக அலுவலர்களின் மனப்பாங்குகளை மாற்றுவதற்கும் மற்றும் பயிற்சியளிப்பதற்குமான தேவையொன்று இன்னும் உள்ளது. இதனடிப்படையில், மனித வள மேம்பாட்டிற்கான முறையான பொறிமுறையொன்றினை அமைப்பதற்காக குறைவாக உள்ள பயிற்சி நிறுவனத்தினை அமைப்பது முக்கியமானதாகும்.

பொருளாதார நெருக்கடிக்கு பதில் நடவடிக்கையாக, ஆட்சேர்ப்பினைக் கட்டுப்படுத்துகின்ற அரசாங்க கொள்கை காரணமாக, கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு தேவையான பதவியணியினர் இல்லாது, கணிசமான அளவு அலுவலர்களின் பற்றாக்குறையுடன் இலங்கைச் சுங்கம் செயற்பட்டு வருவதானது, சேவையின் தரத்தினையும் பாதிக்கிறது. மேலும், வரையறுக்கப்பட்ட பதவியணியின் முறையற்ற ஒதுக்கீடு மற்றும் தற்போதைய இடமாற்ற நடைமுறை என்பன சிக்கலை மேலும் பெரிதுபடுத்தியுள்ளது. ஆளணியினரை மேலும் ஊக்கப்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்குமாகவும், திறமையினை அடிப்படையாக கொண்ட பதவியுயர்வு முறையொன்றுடன், அலுவலர்களுக்காக கவர்ச்சிகரமான சம்பளமொன்றுடன் ஊக்குவிப்புத் திட்டமொன்றும் தேவைப்படுகிறது.

நாட்டிலும் சமூகத்திலும் முக்கியமானதொரு பங்கினை வகித்த போதிலும், ஊடகங்களில், குறிப்பாக சமூக ஊடகங்களில் பிரதிபலிக்கின்ற இலங்கை சுங்கம் தொடர்பிலான பொது எண்ணப்பாங்கு ஆரோக்கியமானதாக இல்லை. ஆகவே, சாத்தியமான பலவீனங்களை நிவர்த்திசெய்து, நேர்மறையான எண்ணப்பாங்கினை உருவாக்குவது இலங்கைச் சுங்கத்திற்கு குறிப்பிடத்தக்கதொரு சவாலாக உள்ளது.

தரமான சேவைகளை வழங்குவதற்கு தேவையான நிறுவன சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு துறைகள் என்பனவற்றில் இலங்கைச் சுங்கம் இன்னும் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது. சில அடையாளங் காணப்பட்ட தேவைகளாக, ஏனையவற்றுக்கு மத்தியில், ஞூஆயுசுவு தொழில்நுட்பத்துடன் கூடிய சரக்குப் பரிசோதனை வசதி, அங்கீகாரம் பெற்ற சுங்க இரசாயன கூடம் மற்றும் இலங்கைச் சுங்கத்தின் பணிப்பகங்களுக்கு மத்தியிலான பொருத்தமான உள்ளக தொடர்பாடல் முறைமை என்பனவற்றினை இது உள்ளடக்குகிறது.

ஆராய்ச்சிகளுக்காக பிரத்தியேகமான பணிப்பகமொன்று இருந்தபோதிலும், தரவு அடிப்படையாக கொண்ட தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதில் பயனுள்ளதான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இலங்கை சுங்கத்திற்கு வாய்ப்பில்லாதுள்ளது.

# முன்னோக்கி நகர்த்தல் : வெற்றிக்கான மூலோபாய முன்னோடித் திட்டமொன்றினை உருவாக்குதல்

இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் அதன் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியை தற்போது எதிர்கொண்டு வருகிறது. அரசாங்கத்திற்கு முதன்மையாக வருமானம் திரட்டுகின்ற நிறுவனங்களில் ஒன்று என்ற வகையில், இலங்கைச் சுங்கமானது, கணிசமான பங்களிப்பை வழங்குமென்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, இலங்கைச் சுங்கத்திற்கான மூலோபாயத் திட்டமிடலின் கவனமானது, முதன்மையாக, விரைவில் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு உதவுவதற்காக அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்களை அடைவதனை மையப்படுத்தியுள்ளது.

இப்பாதையில் கவனம் செலுத்தி, வருமானக் கசிவுகளை அடைத்து, உரிய வருமானத்தினை அரசாங்கத்திற்கு வினைத்திறனும் பயனுறுதியுமிக்க வகையில் பெற்றுக் கொள்வது முக்கியமாகும். இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகிய இரண்டு துறைகளிலும் வர்த்தக அளவினை விரிவுபடுத்துவதற்காக தடையற்ற வர்த்தக செயற்பாட்டை உறுதிப்படுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். இது தொடர்பில், நடைமுறைகளை சீரமைத்து, புதிய நடடிக்கைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை அறிமுகப்படுத்துவது அவசியமாகும். இலங்கைச் சுங்கத்திற்கு மாற்றங்கள் மற்றும் புதிய நடவடிக்கைகளைப் புகுத்துவதானது, உலக சுங்க அமைப்பின் திருத்தப்பட்ட கியோட்டோ வழக்காறு மற்றும் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கை என்பனவற்றில் விபரிக்கப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் கடப்பாடுகள் என்பனவற்றினைப் பின்பற்றி அமைதல் வேண்டும்.

இலங்கைச் சுங்கத்தின் எதிர்காலத்தினைத் திட்டமிடுவதற்கான மூலோபாயங்களைக் கண்டறிவதில், இலங்கைப் பொருளாதாரத்தினை மீள்கட்டமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்ற சர்வதேச நாணய நிதிக் குழுவினால் மெற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை கருத்திற் கொள்வது அவசியமாகும். உதாரணமாக, பதவியிணர்களுக்கு மத்தியில் எழுகின்ற ஒழுக்க மேம்பாட்டுடன் தொடர்புபற்ற பிரச்சினைகளைக் கையாள்வதற்காக இலங்கைச் சுங்கத்தினுள் உள்ளக அலுவல்கள் பிரிவொன்றினை நிறுவுவதும் அவர்களின் முக்கிய பரிந்துரையாகும். இதேவேளை, இலங்கைச் சுங்கம் புதிய நடவடிக்கைகளை அமுல்படுத்துகையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளையும் கருத்திற்கொள்கிறது.

இலங்கைச் சுங்கத்தின் எதிர்காலத்தினை முன்னோக்கி வழிநடாத்துவதிலுள்ள மற்றுமொரு முக்கிய காரணியாக சர்வதேச வர்த்தகத்தின் போக்கினைப் புரிந்துகொள்வதாகும். உதாரணமாக, இலங்கை வர்த்தகத்தில் இலத்திரனியல் வர்த்தகத்தின் பெருக்கம் மற்றும் இது போன்ற போக்குகள் என்பன கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக, வர்த்தகத்தினை அடிப்படையாக கொண்ட பணமோசடியானது, சர்வதேச வர்த்தகத்திற்கு அச்சுறுத்தலாக உருவாகி வருவதனால் இதுவும் சுங்கத்தின் கவனத்திற்குட்படுத்தப்பட்டுள்ளது.

ஜெர்மனிய அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டு, UNCTAD இன் தொழில்நுட்ப உதவியுடன், சர்வதேச கடல்சார் கருத்திட்டத்தின் கீழ் மற்றுமொரு குறிப்பிடத்தக்க முறைமையான ASYHUB ஆனது, இலங்கைச் சுங்கத்தினால் 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தவுள்ளது என்பதனைக் குறிப்பிடுவது முக்கியமாகும். இக்கருத்திட்டத்தினை செயற்படுத்துவதன் மூலம், கடல்சார் சரக்குகளின் வருகைக்கு முன்னைய இடர் அடிப்படையான செயலாக்கம், துரிதமான சரக்கு விடுவிப்பு மற்றும் குறைந்த செலவுகள் என்பனவற்றிலிருந்தான நன்மைகளை இலங்கைச் சுங்கம் பெற்றுக்கொள்ளும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கெரவளப்பிட்டியவில் அமைக்கப்படவுள்ள உத்தேச சுங்கப் சோதனை வசதியானது, கொள்கலன்களைப் சோதனையின் போது SMART தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதோடு, இதன் மூலம் சரக்கு வெளியெடுக்கும் நேரத்தினைக் குறைத்து, பயநர் சேவைகளை மேம்படுத்தும் என்பதுடன், இது இலங்கை சுங்கம் அடையப்பெறவுள்ள மற்றுமொரு குறிப்பிடத்தக்க சாதனையுமாகும்.

இலங்கை சுங்கத்தின் பிரதான செயற்பாடுகள் மற்றும் குறிக்கோள்களின் அடிப்படையில், வருமானம், சுற்றாடல் சமூகப் பாதுகாப்பு, மற்றும் வர்த்தகத்திற்கு வசதியளித்தல் ஆகிய முக்கிய மூன்று துறைகள் அடுத்து வரும் ஐந்தாண்டுத் திட்டமிடல் மூலோபாயங்களில் அடையாளங் காணப்பட்டுள்ளன. அத்துடன், இலங்கை சுங்கத்தினை ஒரு நிறுவனமாக மீளக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம் உணரப்பட்டு, நிறுவன ரீதியான மேம்பாடானது நான்காவது துறையாக உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்தாண்டு மூலோபாயத் திட்டமானது, இத்தகைய நான்கு முக்கிய துறைகளையும் மையப்படுத்தி, அவற்றின் அடைவுகளுக்கான மூலோபாயங்கள் மற்றும் குறிக்கோள்களைக் கோடிட்டுக் காட்டுகிறது.




# இலக்கு 1: வருமானம்

எந்தவொரு சுங்க நிருவாகத்திற்கும் பொதுவானதொரு நோக்கமாக வருமான சேகரிப்பு காணப்படுகிறது. ஆயினும், நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அரசாங்க வருமானத்திற்கு கணிசமான பங்களிப்பாளராக இலங்கைச் சுங்கம் முன்னொருபோதுமில்லா-தவாறான முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளது. நிதி நெருக்கடியான காலங்களில் அரசா-ங்கம் குறிப்பாக, சுங்கம் போன்ற வருமானமீட்டுகின்ற திணைக்களங்கள் மீது அதிக எதிர்-பார்ப்புக்களை வைக்கிறது என்பது தெளிவாகிறது. அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலட்சிய வருமான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக இலங்கை சுங்கமானது வருமானத்தினைத் திரட்டுவதற்கான புதிய வழிகளை செயலூாக்கத்துடன் தேடுகின்ற அதே வேளை, உரிய வருமானங்களை திரட்டுவதனை உறுதிசெய்வதற்கான அதன் முயற்சிகளையும் தீவிரப்படுத்தல் வேண்டும்.

### இலக்கு 1: வருமானத்தினை அதிகரித்தல்

### குறிக்கோள்கள்:

1.1 உரிய வருமானத்தினைத் திரட்டுதல்

1.2 கசிவுகளைத் தவிர்த்தல்

1.3 புதிய வழிகளைக் கண்டறிதல்

## 1.1 உரிய வருமானத்தினைத் திரட்டுதல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| மேம்பட்ட இடர்வு முகாமைத்துவ முறைமை ஒன்றினை செயற்படுத்தல் | மேம்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டு நிலைகள் |
| அலுவலர்களின் திறனினை மேம்படுத்தல் | திறமையான ஊழியப்படை |
| பண்ட வகைப்படுத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் தோற்ற நாடு என்பனவற்றுக்காக முன்கூட்டிய விதியினை அமுல்படுத்தல். | வர்த்தகர்களின் அதிகரித்த தகவலறிந்த சட்ட இயைவான நிலை |
| தன்னியக்கத்தினை மேமபடுத்தல் | குறைந்தளவிலான மனிதத் தலையீடு |
| சரக்குப் பரிசோதனைக்காக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல். | வினைத்திறனும் பயனுறுதியுமிக்க சரக்குச் சோதனை |
| சுங்க விடுவிப்பு ஆவணங்களின் செல்லுபடியாக்கத்தினை உறுதிப்படுத்தல். | சுங்க விடுவிப்பு ஆவணங்களின் அதிகரித்த துல்லியத்தன்மை |
| மேம்படுத்தப்பட்ட ASYCUDA தரவுத்தளத்தின் இருப்பை உறுதிப்படுத்தல். | உரிய வரி வருமானத்தினை உரிய காலத்தில் திரட்டுதல் |
| அக்கறையுள்ள பங்காளரின் ஒத்துழைப்பினை பலப்படுத்தல் | வலுப்படுத்தப்பட்ட ஒத்துழைப்பு |

## 1.2 கசிவுகளைத் தவிர்த்தல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| கொள்கை உருவாக்கத்திற்காக பரிந்துரைகளை மேற்கொள்ளல் | புதிய கொள்கைகளை முன்னெடுத்தல் |
| சுங்க கட்டுப்பாட்டுப் பொறிமுறைகளை பலப்படுத்தல் | அதிகரித்த சட்ட இயைவான நிலைகள் |
| சரக்கு வெளியெடுத்தலுக்குப் பின்னரான கணக்காய்வுக் கட்டுப்பாடுகளை பலப்படுத்தல் | மேம்பட்ட சட்ட இயைவான நிலைகள் |
| சோதனை மற்றும் பரிசோதனை நடைமுறைகளை மேம்படுத்தல் | மீறல்கள்/ ஒழுங்கீனங்களைக் குறைத்தல் |
| சாத்தியமான ஊழல் நடைமுறைகளைத் தவிர்த்தல் | அதிகரித்த ஒருங்கிணைப்பு நிலைகள் |
| நிறுவனங்களுக்கிடையேயான கூட்டுறவினை பலப்படுத்தல் | செயற்பாடுகளை வெற்றிகரமாக பூரணப்படுத்தல் |

## 1.3 புதிய வழிகளைக் கண்டறிதல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| வினைத்திறனும் பயனுறுதியுமிக்க இலத்திரனியல் வர்த்தக சரக்குகளை வெளியெடுப்பதற்காக முறைமையொன்றினை அமுல்படுத்தல். | நன்கு தாபிக்கப்பட்ட விற்பனையாளர் சேகரிப்பு முறைமை |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தரவுப் பரிமாற்றம் மூலம் மாற்றீடு விலைப் பிரச்சினைகளைத் தீர்த்தல் | மாற்றீடு விலை மோசடிகளைக் குறைத்தல் |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை மேம்படுத்தல் | அறிவினை அடிப்படையாக கொண்ட புதிய ஆராய்ச்சி |
| சரக்கு வெளியகற்றல் செயன்முறையினை தன்னியக்கப்படுத்தல் | நிறுவப்பட்ட இலத்திரனியல் விலைகோரல் முறைமை |



# இலக்கு 2: வர்த்தகத்திற்கு வசதியளித்தல்

பொருளாதார அபிவிருத்திக்கான அவசிய காரணிகளில் ஒன்றான வர்த்தக அளவினை விரிவுபடுத்துவதற்காக, வர்த்தகத் தடைகளை நீக்குவது கட்டாயமானதாகும். தற்போதைய பொருளாதார ஸ்தீரமற்ற நிலையிலிருந்து விடுபட்டு, நேர்மறையான வளர்ச்சியை நோக்கி நகர்வதற்காக உலக சுங்க அமைப்பின் திருத்தப்பட்ட கியோட்டோ வழக்காறு (WCO-RKC) மற்றும் உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியளிப்பு ஒப்பந்தம் (WTO-TFA) போன்ற சர்வதேச ரீதியிலான வழக்காறுகளில் காணப்படுகின்ற அளவுமட்டக் குறியீட்டு நியமங்களுடன் இசைவான நடவடிக்கைகளை செயற்படுத்துவதன் மூலம் வர்த்தகத்திற்கு வசதியளிப்பது அவசியமாகும். இடர்வு முகாமைக் கொள்கைகளின் அமுலாக்கமானது சட்ட இயைவான மற்றும் சட்ட இயைவற்ற வர்த்தகர்களை வேறுபடுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதோடு, இது இணக்கமின்மையினை விசேட பரிசீலனையுடன் எதிர்கொள்வதனையும், இணக்கமான வர்த்தகர்களுக்கான வசதியளிப்பினையும் எளிதாக்குகிறது. இந்த மூலோபாய அணுகுமுறையானது வர்த்தக செயன்முறைகளை சீரமைப்பது மாத்திரமன்றி நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கான உகந்த சூழலொன்றினையும் வழங்குகிறது.

## இலக்கு 2: சட்டரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்தல்

### குறிக்கோள்கள் :

2.1 வர்த்தகத்தினை எளிதாக்குகின்ற நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் சர்வதேச கடப்பாடுகளுடன் இணங்குதல்

2.2 வர்த்தகத்தை எளிதாக்குவது தொடர்பில் அரசாங்க கொள்கைகளை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்க வகையிலும் செயற்படுத்துதல்.

2.3 இணக்கமற்ற வர்த்தகத்தினைத் தடுத்தல்

## 2.1வர்த்தகத்தினை எளிதாக்கல் தொடர்பிலான சர்வதேச கடப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் இணங்குதல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| தற்போதுள்ள சட்டங்களுக்கு பொருத்தமான திருத்தங்களை முன்மொழிதல் | வலுவான சட்ட கட்டமைப்பு |
| தேசிய ஒற்றைச் சாரளத்திற்கு உதவுதல் | நிறுவப்பட்ட தேசிய ஒற்றைச் சாரளம் |
| சரக்கு வருகைக்கு முன்னதான செயன்முறையாக்கத்தினை அறிமுகப்படத்தல் | பூர்த்திசெய்யப்பட்ட ASYHUB கருத்திட்டம் |
| வர்த்தகர்கள், ஏனைய சுங்க நிருவாகங்கள் மற்றும் ஏனைய அரச நிருவனங்களுடன் கூட்டிணைதல் | நிறுவப்பட்ட தகவல் பகிர்வுத் தளங்கள் |
| சரக்குகளை வெளியெடுத்த பின்னரான கணக்காய்வுக் கட்டுப்பாடுகள் | சரக்கு வெளியெடுத்தலுக்கான அதிகரித்த வினைத்திறன் |
| சர்வதேச கடப்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் மீளாய்வு செய்வதற்குமான வழிமுறையினை உருவாக்குதல் | சர்வதேச கடப்பாடுகளுடன் இணங்குதல் |
| அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குநர்(AEO)/பிரதான பொருளாதார இயக்குநர்(CEO) தளத்தினை விரிவாக்குதல். | விரிவாக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குநர்(AEO)/ பிரதான பொருளாதார இயக்குநர்(CEO) தளம் |
| சுங்கத்தோடு சம்பந்தப்பட்ட உலக வர்த்தக அமைப்பின் வர்த்தகத்தினை எளிதாக்கல் உடன்படிக்கையின் எஞ்சியுள்ள பகுதிகளை அமுல்படுத்தல் | பூரணமாக அமுலாக்கப்பட்ட உலக வர்த்த அமைப்பின் வர்த்தக வசதி ஒப்பந்தம் |
| வர்த்தகத்தினை எளிதாக்குதலுடன் சம்பந்தப்பட்ட உலக சுங்க அமைப்பின் வழிகாட்டல்களை அமுல்படுத்தல் | அமுல்படுத்தப்பட்ட உலக சுங்க அமைப்பின் வழிகாட்டல்கள் |

## 2.2 வர்த்தகத்தினை எளிதாக்குதல் தொடர்பான அரசாங்க கொள்கைகளை வினைத்திறனும் பயனுறுதியுடனும் நடைமுறைப்படுத்தல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| செயன்முறையினை எளிமைப்படுத்தல் மற்றும் நியமப்படுத்தல் | மேம்பட்ட வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமுகத்தன்மை |
| மேம்பட்ட தொழிலநுட்பங்கள் மற்றும் தன்னியக்கம் என்பனவற்றினை அறிமுகப்படுத்தல் | குறைவான மனிதத் தலையீடு மற்றும் காகிதப் பணி |
| சுங்க வணிக பங்குடைமை நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தல் | வர்த்தகத்திற்கான மேம்பட்ட வசதி |

## 2.3 இணக்கமற்ற வர்த்தகத்தினைத் தடுத்தல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| அமுலாக்கம் மற்றும் கட்டுப்பாடுகளை பலப்படுத்தல் | அதிகரித்த சட்ட இயைவாக்க மட்டங்கள் |
| பங்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | அதிகரித்த தகவலறிந்த சட்ட இயைவாக்கம் |
| முழுமையான அறிக்கையிடல் மற்றும் மீளாய்வுகள் என்பனவற்றுடன் இணைந்த வகையில் போதுமான மற்றும் நிலையான தடுப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்தல் | அதிகரித்த நியாயமான பொருளாதாரம் |



# இலக்கு 3:
# சுற்றாடல் - சமூகப் பாதுகாப்பு

"சுற்றாடல் - சமூகப் பாதுகாப்பு" என்பது ஓர் ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும். இது சுற்றாடல் நிலைபேற்றுத்தன்மை (சுற்றாடல்) மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகிய இரு கூறுகளையும் ஒருங்கிணைக்கிறது. இது சுற்றாடல் மற்றும் சமூகக் காரணிகளின் சார்புடைமையினை அங்கீகரிப்பதோடு, சுற்றாடல் சவால்கள் மற்றும் சமூக நல்வாழ்வு ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் கையளுகின்ற கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்க முற்படுகிறது. சுற்றாடல் மாசுபடுதல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் பெரும்பாலும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்பதையும், நீண்ட கால நிலைபேற்றுத்தன்மையை உறுதிசெய்வதற்காக தீர்வுகள் இரண்டு அம்சங்களையும் ஒன்றாக கருத்திற்கொள்ள வேண்டுமென்பதனையும் இக் கருத்து அங்கீகரிக்கிறது. .

## இலக்கு 3: வினைத்திறனான எல்லைக் கட்டுப்பாட்டின் மூலம் மக்களையும் சுற்றாடலையும் பாதுகாத்தல்.

## குறிக்கோள்கள் :

3.1. எல்லை கடந்த குற்றங்கள் மற்றும் தவறுகளைத் தடுத்தல்.
3.2. சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் தேசிய தரம் என்பனவற்றின் இணக்கப்பாட்டினை மேம்படுத்தல்.
3.3 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எல்லை முகவர்களுடனான உறவை மேம்படுத்தல்.
3.4 சுற்றாடல் - சமூகப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதலை ஊக்குவித்தல்.

## 3.1 நாடு கடந்த பாரிய குற்றம் மற்றும் தவறுகளைத் தடுத்தல்.

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| எல்லை கடந்த குற்றங்கள் தொடர்பில் அலுவலர் பயிற்றுவிப்பு மற்றும் அபிவிருத்தி என்பனவற்றில் முதலீடுசெய்தல் | திறமையான எல்லைக் கட்டுப்பாட்டு அலுவலர்கள் |
| எல்லை இடர்வுகள் மற்றும் அச்சுறுத்தல்களை கண்டறிதல், தடுத்தல், தகர்த்தல் மற்றும் அறிக்கையிடல் | குறைந்தளவிலான மோசடிகள் மற்றும் குற்றங்கள் |
| வர்த்தக அடிப்படையிலான பண மோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட நிதிச் செயற்பாட்டுச் செயலணியின் FATF (Financial Action Task Force) நியமங்களைச் செயற்படுத்தல் | சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிக்கை யிடுவதற்கும், நிதிப் புலனாய்வுப் பிரிவுடன் மோசடித் தரவுகளைப் பகிர்ந்து கொள்வதற்குமான நிறுவப்பட்டதொரு முறைமை |
| அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்துதல் | மேம்பட்ட கண்டறிதல் மற்றும் வினைத்திறன் |
| சமூக மற்றும் சுற்றாடல் அம்சங்களை கூட்டிணைப்பதற்காக வருமான முகாமைத்துவ முறைமை (RMS) உள்ளடங்கலாக அனைத்து செயன்முறைகளையும் நவீனமயமாக்குதல். | மேம்பட்ட கண்டறிதல் மற்றும் வினைத்திறன் |
| ஏனைய அரச நிறுவனங்களுக்கு மத்தியில் நிகழ் நேர தகவல் பரிமாற்றத்திற்கான தளமொன்றினை அபிவிருத்தி செய்தல் | அதிகரித்த வினைத்திறனான கூட்டுச் செயற்பாடுகள் |

## 3.2 பல்தரப்பு உடன்படிக்கைகள் மற்றும் தேசிய தரநிலைகள் என்பனவற்றின் இணக்கப்பாட்டினை அதிகரித்தல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| பயன்பாட்டிலுள்ள சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை சீரமைத்தல் | சீரமைக்கப்பட்ட சட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு |
| தற்போதுள்ள பன்முக உடன்படிக்கைகள் மற்றும் தரங்கள் குறித்து அதிகாரிகளுக்கு மத்தியில் விழிப்புணர்வினை மேம்படுத்தல் | மேம்பட்ட வழிப்புணர்வு |
| சுக நல மற்றும் தாவரநல (Sanitary and phytosanitary) நடவடிக்கைகளை வினைத்திறனுடன் அமுல்படுத்தல் | அதிகரித்த உயிரியற் பாதுகாப்பு |

### 3.3 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு எல்லை முகவர்களுடனான உறவை அதிகரித்தல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| சுங்க பரஸ்பர உதவி ஒப்பந்தங்களை உருவாக்குதல் (CMAAs) | அதிகரித்த ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பகிர்வு |
| தேசிய மற்றும் சர்வதேச திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் தொடர்புகளை அதிகரித்தல் | வலுப்படுத்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு |

## 3.4 சுற்றாடல் - சமூகப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதலை ஊக்குவித்தல்.

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| கால அட்டவணைக்கு அமைய பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சமூக ஈடுபாட்டு முன்னெடுப்புக்கள் என்பனவற்றினை நடாத்துதல் | அதிகரித்த பொதுமக்கள் வழிப்புணர்வு |
| அரச தனியார் கூட்டுப் பங்கேற்பினை அமுல்படுத்தல் | நன்கு தகவலறிந்த மக்கள் |
| பொதுமக்கள் அறிக்கையிடும் முறைமையினை அறிமுகப்படுத்தல் | விரிவுபடுத்தப்பட்ட தகவல் வலையமைப்பு |
| பொது விருதுகள் மற்றும் அங்கீகாரம் என்பனவற்றை அதிகரித்தல் | அதிகரித்த பொதுமக்கள் பங்கேற்பு |



# இலக்கு 4: நிறுவன ரீதியான அபிவிருத்தி

தொழிற்பாட்டு செயன்முறையினை உச்சமாகப் பயன்படுத்தல், வினைத்திறனினை அதிகரித்தல், மற்றும் வளங்களின் பயனுறுதிமிக்க முகாமையினை உறுதிப்படுத்தல் என்பனவற்றுடன் இணைந்த வகையில், இலங்கைச் சுங்கத்தின் நிறுவன ரீதியிலான அபிவிருத்தியானது, அவசிய தேவையாக உள்ளது. இந்த மூலோபாய அபிவிருத்தித் திட்டதில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்காக நிறுவன ரீதியான அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதன் மூலம் நிறுவனத்தின் இயலுமையினை கட்டியெழுப்புவதனை இலங்கைச் சுங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மூலோபாயங்கள், கட்டமைப்பக்கள், மற்றும் செயன்முறைகளை உருவாக்குதல், மேம்படுத்தல் மற்றும் வலுப்படுத்தல் என்பனவற்றினை உள்ளடக்குகிறது. அதிதிறன் மற்றும் ஒழுக்கம்சார் நடத்தையுடன் கூடிய மனித வளங்கள் இலங்கைச் சுங்கத்தின் வெற்றிக்கு தீர்க்கமானவை என்ற வகையில், ஏனையவற்றிற்கு மத்தியில், குறிப்பாக, அலுவலர்களின் மனப்பாங்குகளை மாற்றுவதன் மூலமும் அவர்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்துவதன் மூலமும் மனித வளங்களின் இயலுமையினை மேலும் பலப்படுத்துவது அவசியமாகும்.

## இலக்கு 4 : சிறந்த அடைவுகளுக்காக நிறுவனத்தினை மாற்றியமைத்தல்

### குறிக்கோள்கள்:

4.1 ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நவீனமயமாககல் மூலம் முறைமைகள் மற்றும் நடைமுறைகளை சீரமைத்தல்.

4.2 மனித மூலதனத்தினை அபிவிருத்திசெய்தல்.

4.3 இயங்குநிலை கொண்ட நிறுவன ரீதியான அபிவிருத்தியினை உறுதிப்படுத்தல் மற்றும் வளங்களை உச்சமாகப் பயன்படுத்தல்

4.4 ஒருமைப்பாடு சார்ந்த நிறுவன நடத்தையினை ஊக்குவித்தல்.

## 4.1 ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நவீனமயமாககல் மூலம் முறைமைகள் மற்றும் நடைமுறைகளை சீரமைத்தல்.

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| சுங்க செயற்பாடுகளில் காணப்படுகின்ற வினைத் திறனின்மைகள் மற்றும் தடைகளைக் கண்டறிவதற்காக பயன்பாட்டிலுள்ள முறைமைகள் மற்றம் நடைமுறைகளை விரிவாக ஆய்வுசெய்தல் | சரிசெய்யப்படுவதற்காக கண்டறியப்பட்ட வினைத்திறனின்மைக் குறைபாடுகள் மற்றும் தடைகள் |
| அடையாளங் காணப்பட்ட விதைத்திறனின்மைகள் மற்றும் தடைகள் என்பனவற்றினை சரிசெய்வதற்காக டிஜிட்டல் தளங்கள், தன்னியக்கமாக்கல் கருவிகள் மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற நவீனமயமாக்கல் தீர்வுகளை ஆராய்ச்சி செய்து செயற்படுத்துதல். | சீரமைக்கப்பட்ட முறைமைகள் மற்றும் நடைமுறைகள் |
| ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தல் | தரவுகளை அடிப்படையாக கொண்ட தீர்மானமெடுக்கம் நடைமுறை |

## 4.2 மனித மூலதனத்தினை அபிவிருத்திசெய்தல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டுதலுக்கான நிறுவனக் கட்டமைப்பொன்றினை உருவாக்குதல். | பயிற்சி மற்றும் வழிகாட்டுதலுக்கான நியமமான கட்டமைப்பொன்றின் கிடைப்பனவுத்தன்மை |

## 4.3 இயங்குநிலை கொண்ட நிறுவன ரீதியான அபிவிருத்தியினை உறுதிப்படுத்தல் மற்றும் வளங்களை உச்சமாகப் பயன்படுத்தல்

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| விஞ்ஞான ரீதியிலான வள முகாமை மூலோபாயத்தினைச் செயற்படுத்துவதன் மூலம் வள ஒதுக்கீட்டினை உச்சமாக்கல். | வினைத்திறனான வள முகாமை |
| நிறுவன அபிவிருத்தியில் சிறந்த நடைமுறைகளை ஆராய்ச்சி செய்து கண்டறிதல் | சர்வதேசிய ரீதியிலான சிறந்த நடைமுறைகளுடன் ஒருங்கிணைதல் |
| சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அல்லது முகவர் நிறுவனங்கள் என்பனவற்றுடன் கூட்டாண்மைகள் மற்றும் கூட்டிணைவுகளை ஏற்படுத்தல் | நன்கு தாபிக்கப்பட்ட கூட்டாண்மைகள் மற்றும் கூட்டிணைவுகள் |
| அறிவு, நிபுணத்துவம் மற்றும் சிறந்த நடைமுறைகள் என்பனவற்றை அக்கறையுள்ள பங்காளர்களுடன் பகிர்ந்து கொள்ளல். | ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை அடிப்படையாக கொண்ட மேம்பட்ட சுங்க செயலாற்றுகை |
| சுங்க நிறுவனக் கட்டமைப்பினுள் சிறந்த நடைமுறைகளை செயற்படுத்தல் | நேர்மறையான பின்னுர்ட்டல் மற்றும் அக்கறையுள்ள பங்காளர் அமைப்புக்களின் அங்கீகாரம் |
| விளைவுகள் மற்றும் பின்னுர்ட்டல்களின் அடிப்படையில் நடைமுறைகளை தொடரந்து மதிபீடுசெய்தல். | சுங்கச் செயற்பாடுகளில் அதிகரித்த வினைத்திறனும் பயனுறுதியும் |

## 4.4 நேர்மை சார்ந்த நிறுவன நடத்தையினை ஊக்குவித்தல்.

| மூலோபாயம் | எதிர்பார்க்கப்படும் விளைவு |
|---|---|
| நேர்மை செயற்திட்டத்தினைத் தயாரித்தல் | நிறுவப்பட்ட முறைசார்ந்த நேர்மை அபிவிருத்திக் கட்டமைப்பொன்று |
| நேர்மை மற்றும் நெறிமுறைக் கட்டமைப்பொன்றினை உருவாக்குதல் | நெறிமுறைசர்ந்த நடத்தையுடன் பயிற்றுவிக்கப்பட்ட ஆளணி |
| நேர்மை கட்டமைப்பு குறித்து அனைத்து பணியாளர்களுக்கும், பங்காளர்களுக்கும் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் | நேர்மம் கட்டமைப்பு குறித்து அறிவூட்டப்பட்ட பணியாளர்கள் மற்றும் பங்காளர்கள் |
| வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு என்பனவற்றினை ஊக்குவிப்பதன் மூலம் நெறிமுறைசார்ந்த கலாசாரமொன்றினைத் தோற்றுவித்தல். | பொறுப்புடைய, வகைசொல்லற் பொறுப்புடைய ஆளணி |
| நேர்மை தொடர்பிலான பிரச்சினைகளை அறிக்கையிடவதற்கும், கையாள்வதற்குமான வழிமுறையினை நிறுவுதல் | ஊக்கம்குன்றச்செய்யப்பட்ட நெறிமுறையற்ற நடத்தைகள் |
| நெறிமுறையான நடத்தைகளை அங்கீகரித்து, வெகுமதிகளை வழங்குதல் | ஊக்குவிக்கப்பட்ட நெறிமுறைசர்ந்த நடத்தை |
| தன்னார்வ இணக்கத்தின் நன்மைகள் குறித்து பொது வழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | அக்கறையுள்ள பங்காளர்களின் அதிகரித்த நேர்மை நிலை |


CUSTOMS
MuseuM